Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/33/2021**

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

## புனித வின்சென்ட் தே பவுல் திருநாள்

**"ஏழைகளுக்கு உதவி செய்ய மறக்க வேண்டாம் என்று மட்டும் அவர்கள் கேட்டபோது, அதை செய்வதில் தான் நான் முழு ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தேன்** (கலாத் 2:10)" என்ற பவுலடியாரின் கூற்று போல வறுமையில் பிறந்து அடிமையாய் வாழ்ந்து குருவானவராய் உயர்ந்து தனது வாழ்வு முழுவதையும் ஏழைகளுக்காகவே அர்ப்பணித்து வாழ்ந்தவர்தான் புனித வின்சென்ட் தே பவுல்.

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அதிலும் கூனும் குருடும் செவிடும் நீங்கிப் பிறத்தல் அரிது" என்கிறார் ஔவையார். மானிடப் பிறப்பின் முக்கியத்துவத்தையும், உடற்கூறுகளின் நேரியச் செயல்பாடுகளின் முக்கியத்துவத்தையும் அவர் தமது பாடல் வரிகளில் பதிவு செய்கிறார். கூனும் குருடும் செவிடும் நீங்கி நாம் என் படைக்கப்பட்டிருக்கிறோம் என இத்திருநாளில் சிந்திப்பது நல்லது என நான் கருதுகிறேன். காரணம், அவ்வாறு நாம் படைக்கப்பட்டிருப்பது அத்தகு மனித உயிர்களில் வாழும் கிறிஸ்துவை சந்திப்பதற்காகவே. அவ்வாறு சந்தித்து மறைந்து; இன்றும் மனித மனங்களில் வாழ்ந்து வருபவர்கள் தான்; புனித வின்சென்ட் தே பவுல் எனும் குருவானவரும் அவர் பெயரில் பிறரன்புப் பணியாளர்களின் சபையை நிறுவிய அருளாளர் பிரடரிக் ஓசானாமும் ஆவர்.

புனித வின்சென்ட் தே பவுல் காலத்துக்குப் பின் சுமார் 200 ஆண்டுகள் கடந்து 1833-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 இல் 'தருமசபை' என்னும் பெயரில் பிரான்ஸ் நாட்டில் 20 வயதுடைய பிரடரிக் ஓசானாம் என்னும் சட்டக் கல்லூரி மாணவனால் கரு கொண்டது தான் இச்சபை. தன்னால் உருவாக்கப்பட்ட சபை எனினும் இன்றைய இளையோருக்கு எடுத்துக்காட்டாக அவர்

தன்னைவிட வயது முதிர்ந்த 40 வயதுடைய சகோ. இம்மானுவேல் பெய்லி என்பவரின் தலைமையை ஏற்றுக்கொண்டார். 7 உறுப்பினர்களைக் கொண்ட இத்தருமசபை 1834-ஆம் ஆண்டு பிப்ரவரி 7 ஆம் நாள் **“புனித வின்சென்ட் தே பவுல்”** என்ற பிறரன்புப் பணியாளர்களின் பாதுகாவலரின் பெயரில் பெயர் மாற்றம் பெற்று இன்றளவும் மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இச்சபை சுமார் 150 நாடுகளில் 47000 க்கும் மேற்பட்ட கிளைச்சபைகளுடன் செயல்படுகிறது என்பதை எண்ணி பெருமை கொள்வோம். சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டு பொதுநிலையினரின் தலைமையில் செயல்படும் இப்பெரிய சபையில் உறுப்பினர்களாக இணைந்து செயல்படும் ஒவ்வொரு பிறரன்புப் பணியாளர்களையும் இச்சபையின் திருநாளிலே மனதாரப் பாராட்டி திருநாள் வாழ்த்துக்களையும் பதிவு செய்கிறேன்.

செப்டம்பர் 9 அருளாளர் ஓசானாமின் திருநாளையும் செப்டம்பர் 27 இல் புனித வின்சென்ட் தே பவுல் திருநாளையும் கத்தோலிக்க திருச்சபை நினைவு கூருகிறது. சபை உறுப்பினர்கள் இந்நாட்களை சிறப்பு செயல்பாடுகளால் மெருகூட்ட வேண்டும். குறிப்பாக, நற்கருணை நாதரிடம் அதிக நேரம் செலவிட்டு சக்தி பெற்று பிறரன்புப் பணியாற்றிய அன்னைத் தெராசா போல நற்கருணை பக்தி ஒவ்வொரு வின்செந்தியரிடமும் மிகுந்து காணப்பட வேண்டும். கோவிட்-19 நோயினால் மற்றும் பயத்தால் பாதிக்கப்பட்டுள்ள நம் அயலாரை; அன்பு எனும் கரத்தால் அரவணைக்க நாம் முன் வரவேண்டும். செப்டம்பர் 27-இல் சபை பாதுகாவலர் திருநாளைக் கொண்டாடும் வேளையில் இத்தகு சிந்தனைகளை மனதில் இருத்தி செயல்பட உங்களை அழைக்கிறேன்.

1963-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8 ம் நாள் அருட்தந்தை தாமஸ் வீட்டுவேலிக்குன்னேல் அடிகளாரின் சீரிய முயற்சியால் சூசைபுரம் பங்கில் காலஞ்சென்ற சட்டமன்ற உறுப்பினர் திரு. கபிரியேல் நாடார் தலைமையில் குமரி மண்ணில் அதிகார பூர்வமான முதல் கிளைச்சபை உருகொண்டது. தக்கலை மறைமாவட்டம் உருவானபின்; 12.12.1997 இல் “தக்கலை மத்தியப் பேரவை” உருவானதையும் நீங்கள் அறிவீர்கள். மறைமாவட்டம் உருவாகி 25 ஆண்டுகள் நிறைவு செய்வது போல தக்கலை மத்தியப் பேரவையும் அதன் வெள்ளி விழாவை நினைவு கூரும் தருவாயில் இருக்கிறது. சற்று பின்னோக்கி நம் நினைவலையை ஓடவிட்டால் இச்சபை இங்கு உருகொண்ட நாள்முதல் இன்றளவும் கோடிக்காணக்கான பணமதிப்பிலான பொருளாதாரப் பணிகளும் ஆன்மீக பயிற்சிகளும் வின்செந்தியர்களால் நமது மண்ணில் விதைக்கப்பட்டிருப்பதை நம்மால் உணர முடியும். அதற்காக உழைத்த ஒவ்வொரு வின்செந்தியர்களையும், ஒத்துழைத்த இறைமக்களையும் குறிப்பாக அவர்களை வழிநடத்திய அருட்தந்தையர்களையும் பாராட்டுகிறேன்.

அதுபோல மத்தியப்பேரவை முன்னெடுத்துவரும் காருண்ய நிதி செயல்பாடுகள், கல்வி உதவித் தொகைகள், ஜூபிலி கடனுதவித்திட்டம், ஓசானாம் நிலையத்தில் நடைபெறும் DB Tech

மற்றும் இதரப் பயிற்சிகள், ஆசாரிபள்ளத்தில் நடந்துவரும் வான் (VAAN) திட்ட கட்டிடப்பணி மேலும் கிளைச்சபைகளில் நடைபெறும் ஏராளம் பிறரன்புப் பணிகள் போன்றவற்றை பாராட்டுவதோடு தொடர்ந்து அதன் செயல்பாடுகளை மெருகூட்டவும் நீங்கள் முயல வேண்டும். அதோடு, புதிய உறுப்பினர்களை குறிப்பாக இளையோரை சபைப்பணிகளில் இணைப்பதில் உங்கள் கவனம் தேவைப்படும் காலகட்டமும் இது என எண்ணுகிறேன்.

மறைமாவட்ட வெள்ளிவிழாவை முன்னிட்டு வின்செந்தியர்கள் செய்ய வேண்டிய செயல்பாடுகளை வேகத்துடன் செய்து வருகிறீர்கள் எனவும் நம்புகிறேன். அதை ஒவ்வொரு கிளைச்சபையும் செயல்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 2-ம் நாள் நீங்கள் செய்துவரும் 'துப்புரவு முகாமை' இவ்வாண்டு ஆலய உட்புறம் மற்றும் வெளிப்புறத்தை தூய்மைப்படுத்தும் பணிசெய்து அந்த நாளை சிறப்பிப்பது நல்லது என நான் கருதுகிறேன். நம் ஒவ்வொருவரின் ஆன்மீக வாழ்வின் மைய ஊற்று ஆலயமே. ஆகவே, அதை தூய்மைப்படுத்துவதும் நமது உள்ளமாகிய ஆலயத்தை தூய்மையாக பேணி பாதுகாப்பதும் நமது தலையாய கடமைகளில் ஒன்று.

இத்தருணத்தில் வின்செந்திய விதி 2:5 இல் கூறப்பட்டுள்ள வின்செந்தியர்களிடம் காணப்பட வேண்டிய 7 நற்பண்புகளைப் பற்றி நான் கூற விளைகிறேன். **எளிமை, இனிமை, உண்மை, உரிமை, கடமை, பொறுமை, நம்பகத்தன்மை** ஆகியவற்றை நம் வாழ்விலும் வின்செந்திய பணிகளிலும் இணைத்துக் கொள்ள நாம் முன்வர வேண்டும்.

உயிர்த்தெழுந்த இயேசு திபேரியக் கடற்கரையில் சீடர்களுக்குத் தோன்றி; **"நீங்கள் இப்போது பிடித்தவற்றில் சில மீன்களைக் கொண்டு வாருங்கள்"** (யோவா 21:10) என்று சீடர்களிடம் கூறினார். ஏற்கெனவே அங்கு மீன் வைக்கப்பட்டிருந்த போதிலும்; நம்மிடமிருந்து புதிய மீன்களை இயேசு எதிர்பார்கிறார். ஆம்! புதிய சிந்தனை; புதிய பாதை; புதிய செயல்பாடுகள்; புதிய உறுப்பினர்கள் ஆகியவற்றோடு இயேசுவை அணுகி அவரது இறையரசைக் கட்டியெழுப்பும் சீடர்களாக நாமும் மாறுவோம். இணைந்து செயல்படுவோம்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
21.09.2021

✠ **மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
**தக்கலை மறைமாவட்ட ஆயர்**

---

2021 செப்டம்பர் 23 அல்லது 26 தேதிகளில் திருப்பலிக்கிடையே வாசிக்கவும். இச்சுற்றுமடல் அனைவரும் அறிய ஆவன செய்ய வேண்டும்.